திரு என். கே. பழனிசாமி : நகரம் அதிகமாக விரிந்து இருப்பதன் காரணமாக இப்போதுள்ள நிலைமையை அனுசரித்து சர்க்கார் இந்த வசதியை அதிகப்படுத்த திட்டம் ஏதாவது வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முன்பு ஒரே இடத்தில் 32 பம்பு செட்டுகளைப்போட்டு காசிமேட்டில் வேலை செய்து வந்தார்கள். இதை விரிவுபடுத்த வேண்டுமென்றுதான் இப்போது சென்னை நகரை ஐந்து மண்டலமாகப் பிரித்து—முதல் மண்டலம் 209 லட்சம், இரண்டாவது மண்டலம் 211 லட்சம், மூன்றுவது மண்டலம் 135 லட்சம், நான்காவது மண்டலம் 116 லட்சம், ஐந்தாவது மண்டலம் 278 லட்சம் என்ற அளவுக்கு திட்டமிட்டு நிதி ஒதுக்கி—முதலாவது திட்டம் முடிந்து விட்டது. இரண்டாவது திட்டம் முடிவடையும் தருவாயில் இருக்கிறது. பாக்கித் திட்டங்களும் தொடர்ந்து எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, இதில் குறிப்பிட்டுள்ள திட்டப்படி—எம்.ஜி.ஆர். நகருக்கு அப்பால் உள்ள குடிசைப் பகுதிகளை பத்தாண்டுகளுக்கு முன்பே வேறுபுறம் போகவேண்டுமென்று மாநகராட்சியும், அரசும் தெரிவித்திருந்தாலும் கூட அந்தக் குடிசைகள் இன்னமும் அகற்றப்படாமல் இருக்கின்றன. அந்தக் குடிசைகளை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஒரு குறிப்பிட்ட பகுதியிலுள்ள கேள்வி—தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துப் பதில் சொல்ல முடியும்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்.

*591 வினா : திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலும், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலும் இன்னும் சொந்தக் கல் கட்டடம் இல்லாத ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் எங்கெங்கே உள்ளன ?

(இ) கல் கட்டடம் இல்லாத ஊர்களில் அவற்றைக் கட்டி முடிக்க மேற்கொண்டுள்ள சிறப்பு நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :

(அ) and (இ) விவர அறிக்கை @ ஒன்று சட்டப் பேரவை முன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த இரண்டு ஒன்றியங்களிலும் இன்னும் அதிகமான பள்ளிக்கூடங்களுக்குச் சொந்தக் கட்டிடம் இல்லாமல் இருக்கின்றன. இந்த இரண்டு ஒன்றியமும் பிற்பட்ட

@119-120-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1975 எப்ரல் 8]

நிலையில் இருப்பதால்—பரிசுச் சீட்டின் வருமானத்தைக் கொண்டாவது அல்லது வேறுவகையிலாவது மீதமிருக்கிற பள்ளிக்கூடங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித்தர உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத் தில 91 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன என்றால் 49 பள்ளிக்கூடங்களுக்கு சொந்தக் கட்டிடம் இருக்கின்றன. 1974-75-இல் 13 பள்ளிக்கூடங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்டப்படுகிறது. மீதமுள்ளது 29 தான். அடுத்து வரும் ஆண்டுகளில் படிப்படியாக கட்டி முடிக்கப்படும்.

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் 78 பள்ளிக்கூடங்கள் இருக் கின்றன. 49-க்கு சொந்தக் கட்டிடம் இருக்கிறது. 3-க்கு கட்டிடங்கள் இந்த ஆண்டில் கட்டப்படுகின்றன. மீதமிருப்பதற்கும் சொந்தக் கட்டிடம் கட்டித்தர முயற்சி மேற்கொள்ளப்படும்.

ஐயாவையனுற்றின் குறுக்கே பாலம்

* 592 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா —

மாயூரம் ஒன்றியம், கொற்கை எனும் ஊரில் ஐயாவையனுற் றுக்குக் குறுக்கே பாலம் அமைத்திடும் பணி தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சட்ட மன்ற உறுப் பினர் குறிப்பிடுகிறதான பால வேலையை முன் வைப்பு வேலையாக நெடுஞ் சாலைத் துறைப்பணியினரிடம் ஒப்படைத்து செயல்படுத்த மாயூரம் ஊராட்சி ஒன்றியப் பொதுக்குழு தீர்மானித்துள்ளது. இதற்கான தேவையான நடவடிக்கைகளை ஊராட்சி ஒன்றிய ஆணையர் எடுத்து வருகிறார்.

திரு. என். கிட்டப்பா : பாலம் கட்டுவதற்குத் தேவையான நடவடிக் கைகளை ஊராட்சி ஒன்றிய ஆணையர் எடுத்து வருவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாயூரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நான். அந்தத் தொகுதியில் கட்டுவதற்கு எடுத்துக்கொண்ட பாலங்கள் பல அப்படியே பாதியில் நிற்கின்றன—இன்னும் கொண்டத்தூர் மன்னி யார் பாலம் அமைக்கும் காண்டிராக்டர் தம்மை அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினரின் உறவினர் என்று சொல்லிக்கொண்டு 200 மூட்டைகளுக்குமேல் சிமிண்டை விற்றிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு இருக்கக்கூடாது. கேள்வியாகப் போடுங்கள்.